## வீதித்துறை உதவிச் செயற்திட்டம் - 2012

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துங்களுக்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட (டொலர்) கணக்குகளிலிருந்தான பற்றுதல்களும் அவற்றிற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 3,527,986,832 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 27,176,611,394 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் கிரயத்தில் | 37,382,303 | 36,527,877 | 218,715,595 |
| சிவில் வேலைகள் | - | 689,957,862 | 22,790,061,873 |
| சிவில் நடைபெறும் வேலைகள் | 2,935,852,461 | 72,209,034 | 3,008,061,495 |
| வடிவமைப்பு ஆலோசனை | - | - | 122,604,637 |
| செயற்திட்டம் மற்றும் ஏனைய ஆலோசனை | 18,616,519 | 34,955,627 | 105,229,507 |
| நிருமாண மேற்பார்வை | 17,217,520 | - | 17,215,520 |
| செயற்திட்டச் செலவினம் | 161,978,285 | 96,986,530 | 506,206,542 |
| பயிற்சி | 17,478,446 | 5,411,577 | 67,125,528 |
| பயன்பாட்டு சேவைகள் மீளமைப்பு | 7,084,035 | - | 315,357,855 |

| | | | |
|---|---|---|---|
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 332,379,263 | (315,223,518) | 26,032,842 |
| | 3,527,986,832 | 620,824,989 | 27,176,611,394 |

## 2.2 விசேட (டொலர்) கணக்குகள்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது மூன்று உடன்படிக்கைகளிற்காகவும் இலங்கை மத்திய வங்கியில் மூன்று விசேட (டொலர்) கணக்குகள் பேணப்பட்டிருந்தன. சம்பந்தப்பட்ட கணக்குகளின் செயற்பாடுகள் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவற்றிற்கான மீதிகள் என்பன கீழே பொழிப்பாகத் தரப்படுகின்றன.

| | 4429 சீஈ | | 4138 சீஈ | | 4906 சீஈ | |
|---|---|---|---|---|---|---|
| **விபரங்கள்** | **இலங்கை ரூபா** | **ஐ.அ.டொலர்** | **இலங்கை ரூபா** | **ஐ.அ.டொலர்** | **இலங்கை ரூபா** | **ஐ.அ.டொலர்** |
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 117,823,746 | 1,034,437 | 96,698,959 | 848,972 | 10,010,654 | 87,889 |
| கூட்டு:- | | | | | | |
| மீள் நிரம்பல்கள் | 2,993,883,928 | 24,409,907 | 97,393,373 | 848,875 | 151,066,301 | 1,161,232 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம்/ (நட்டம்) | 165,541,956 | - | 21,371,352 | - | (263,112) | - |
| | 3,277,249,630 | 25,444,344 | 215,463,684 | 1,697,847 | 160,813,843 | 1,249,121 |
| கழி:- | | | | | | |
| மீளெடுப்புக்கள் | 2,118,324,092 | 16,330,485 | 114,155,992 | 1,137,079 | 112,849,445 | 871,926 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 1,158,925,538 | 9,113,859 | 71,307,692 | 560,768 | 47,964,398 | 377,195 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதலாவது அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் கீழ் ஒன்பது வீதிகளின் புனரமைப்புகளில் செய்யப்பட்ட வேலைகளின் ரூபா 15,227 மில்லியன்

கூட்டுமொத்தத் தொகையான மொத்தப் பெறுமதி அத்தகை ஒப்பந்த பெறுமதியை மீளாய்வு செய்வதற்கு 2012 நவம்பர் 28 இல் வழங்கப்பட்ட அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொள்வனவு குழுவின் சிபார்சுகளின் கீழ் ரூபா 14,994 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்ததுடன் இது ஒப்பந்தகாரர்களிற்கு அறிவிக்காமல் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் சிவில் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும், உரிய ஒப்பந்தங்களின் கீழ் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளும் 5 ஒப்பந்தகாரர்களிடமிருந்து உறுதிப்படுத்தல்கள் அழைக்கப்பட்டிருந்தும், ஒரு ஒப்பந்தகாரர் மாத்திரமே இரண்டு ஒப்பந்தங்கள் தொடர்பான ரூபா 22.15 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான மீதிகளை பெறவேண்டியதாக உறுதிப்படுத்தியிருந்தார். நிதிக் கூற்றுக்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவருக்கு ரூபா 3.49 மில்லியன் தொகை செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) வீதி கற்பதித்தல் இயந்திரமொன்று உரிய இயந்திரம் 2013 பெப்ரவரி 05 இலேயே செயற்திட்ட முகாமைத்துவ கூறிற்கு (பிஎம்யூ) பௌதீக ரீதியாக பெறப்பட்ட போதிலும் கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட ரூபா 5.3 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான இறக்குமதிக் கட்டணங்கள் மற்றும் வங்கிக் கட்டணங்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்றில் சொத்தின் கிரயமாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ஆரம்ப கட்டத்தில் சொத்தின் பெறுமதி தவறாக குறிப்பிடப்பட்டதன் விளைவாக ரூபா 6.9 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான பல்துறை செயற்பாட்டு அளவீட்டு வாகனத்தின் பெறுமானத் தேய்வு 2010 முதல் 2012 வரையான காலத்திற்காக குறைத்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறுபல்துறை செயற்பாட்டு அளவீட்டு வாகனத்திற்கான கருவிகள் தொகுதி மற்றும் தரவு செயற்படுத்தல் அலகொன்று கொள்வனவு செய்தமைகாக தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 5 மில்லியன் தொகை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 3.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்ட ரூபா 85.1 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான ஆதனம், பொறி மற்றும்

உபகரணங்களின் 15 விடயங்களின் கிரயம் செயற்திட்ட முகாமைத்துவ கூறினால் பேணப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்ட ரூபா 84.5 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான அத்தகைய சொத்துக்களின் கிரயத்துடன் உடன்பட்டிருக்கவில்லை. ஆகவே, அத்தகைய சொத்துக்கள் வழங்கிய நேரத்தில்அத்தகைய சொத்துக்களின் விடயங்கள் மற்றும் பெறுமதிகள் என்பன முறைப்படி இனங்காணப்பட்டு செயற்திட்டத்தால் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 679,727 தொகையான கடன் மீதிகள் இனக்கம் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2009 இலிருந்து நிதிநிலைமை கூற்றில் சுனாமி அவசர மீளெடுப்பு செயற்திட்ட - நடைமுறைக் கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 4. பௌதீக செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, செயற்திட்டத்தின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நிதியளிப்புத் திட்டம் | வெளிநாட்டுக் கூறுகளின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வருடாந்த மதிப்பீடுகளில் செய்யப்பட்ட ஏற்பாடுகள் | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் பொது | | 2012 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) |
| **ஐடிஏ அபிவிருத்தி** கடன் இலக்கங்கள்: | | | | | | | |
| 4138 சீஈ | 100.0 | 10,125 | 3,795.0 | 0.8 | 91 | 87.6 | 9,522 |
| 4429 சீஈ | 98.1 | 11,579 | | 24.4 | 2,994 | 92.3 | 10,775 |
| 4906 சீஈ | 100.0 | 11,081 | | 1.2 | 139 | 1.4 | 171 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நாணமாற்று வித்தியாசம் | | | | | 187 | | 259 |
| இலங்கை அரசாங்கம் | | | 121.5 | | 117 | | 6,449 |
| | -------------- | ------------- | ----------- | ------------ | ------------- | -------------- | ---------- |
| மொத்தம் | 298.1 | 32,785 | 3,916.5 | 26.4 | 3,528 | 181.3 | 27,176 |
| | ====== | ====== | ===== | ===== | ===== | ====== | ===== |

**4.2 செயற்திட்டத்தின் கட்டம் 1 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதிப்புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண வேலைகள்**

செயற்திட்டமானது 13 வீதிகளின் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. முன்னேற்ற அறிக்கைகளின்படி, அத்தகைய சகல வீதிகளின் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண வேலைகள் பின்னர் கைவிடப்பட்ட முன்னேற்ற வேலைகள் வட மத்திய மாகாணத்தில் அமைந்திருந்த கல்கமுவ – றம்பேவா வீதி தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறிப்பிடத்தக்களவு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. வீதிகளின் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண வேலைகள் மீதான கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டது.

(அ) ரூபா 11,450.6 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான (வற் இல்லாமல்) 11 வீதிகளின் முன்னேற்ற வேலைகளிற்கான ஒப்பந்தங்களின் ஆரம்ப மதிப்பிடப்பட்ட கிரயம் வேலைகளின் ஆரம்ப நோக்கெல்லை மற்றும் விலைத் தளப்பல்களிற்காக செய்யப்பட்ட படிகள் என்பவற்றில் செய்யப்பட்ட மாற்றங்கள் காரணமாக ஆரம்ப மதிப்பீடுகளின் அதிகரிப்பு 67.6 % ஐ பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 19,193 மில்லியன் (வற் இல்லாமல்) வரை அதிகரித்திருந்தது. எவ்வாறியினும், ஆரம்ப மதிப்படப்பட்ட கிரயத்தின் 2.33 % ஐ மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 266.7 மில்லியனால் (வற் இல்லாமல்) 09 வீதிகளின் வேலைகளின் கிரயத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. மேலும், நித்தம்புவ – கண்டி வீதி மற்றும் காலி- தெனியாய வீதி என்ற பெயரிலுள்ள ஏனைய இரண்டு வீதிகளின் ஆரம்ப கிரய மதிப்பீடுகளின் அதிகரிப்பு 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் கட்டம் 1 இன் கீழ் நித்தம்புவ – கண்டி வீதியில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு வேலைகள் தொழில்நுட்ப நியமங்களுடன் இணங்காமை காரணமாக திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்குவதற்கு திட்டமிடல் கட்டத்திலிருந்து

ஒப்பந்தகாரர் மற்றும் ஆலோசனையாளரின் கவனமின்மையின் விளைவால் அத்தகைய குறைபாடுகளை அடைந்திருந்தது என்பது மேலும் வெளிப்பட்டது. நித்தம்புவ – கண்டி வீதியில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு வேலைகளின் புலனாய்வு தொடர்பில் மொரட்டுவை பல்கலைக்கழகத்தால் 2010 யூன் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- ஆரம்ப கட்டத்தில் வீதி மேற்பரப்பு மற்றும் போக்குவரத்து போன்றவற்றில் வடிவமைப்பு ஆலோசனையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட முறையான மதிப்பீடு இன்மை.

- அணிதல் வேலைகள் மற்றும் கட்டுதல் வேலைகள் போன்ற அத்தகைய வீதி நிர்மாணக் கட்டங்களில் கலவை திட்டமிடல் நியமங்களில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள்.

- குறைந்ததர அஸ்பற் உற்பத்தி, போதிய அமுக்கப்படுத்தாமை மற்றும் போதியதாரின்மை காரணமாக வீதி மேற்பரப்பில் வெடிப்புகள் விருத்தியடைந்திருந்தன. அவதானிக்கப்பட்ட குறைபாடுகளை ஒப்பந்தகாரர்கள் திருத்தியிரந்தனர் என்று முறையான சான்றுகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை.

எவ்வாறாயினும், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயலாளர் செயற்திட்டத்திற்கு மேலதிக கிரயங்கள் ஏற்படாமல் ஒப்பந்தகாரரினால் வீதியின் குறைபாட்டு வேலைகளை திருத்தி பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார். மேலும், திருத்த வேலைகளை கண்காணிப்பதற்கும், குறைபாடுகளின் காரணத்தை பரிசோதிப்பதற்கும் காலரீதியாக வேலைத்தளங்களை பரிசோதிப்பதற்கும் மற்றும் வேலைகளின் தரத்தினை முன்னேற்றுவதில் கள உத்தியோகத்தர்களிற்கு ஆலோசனை அளிப்பதற்கும் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கம் என்பவற்றின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களின் பிரதிநிதிகள் மற்றும் ஆலோசனையாளர் என்போரை உள்ளடக்கிய குழுவொன்று 2010 யூலை 27 இல் நியமிக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில், 2012 மார்ச் 31 அளவில் வீதிக் குறைபாடுகளின் திருத்த வேலைகளை பூர்த்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மேலும், 2012 திசெம்பரில் வருகைதந்திருந்த உலக வங்கிக் குழு 2013 சனவரி 15 இல் அல்லது அதற்கு முன்னர் அந்த திருந்த வெலைகள் பூர்த்தியாக்க வெண்டுமென

அறிக்கையிட்டிருந்தது. எவ்வாறாயினும், 40+550 கிமீ முதல் 50 + 908 கிமீ வரை வீதியின் சேறு / மூடுபனி மட்டமிடல் நடவடிக்கைகளின் முன்னேற்றம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 86 % மாத்திரமேயாக இருந்ததுடன் அந்த வேலைகள் 2013 ஏப்ரல் 30 வரை தொடர்ந்திருந்தது.

(இ) மேலும், ஹலிவெ- பண்டாரவளை வீதி (சீபி-03), பண்டாரவளை – வெலிமட வீதி (சிபி-04) மற்றும் சியாம்பலாண்டுவ – அம்பாறை- காரைதீவு வீதி (சிபி-10) என்ற பெயருடைய மூன்று வீதிகளின் புனரமைப்பு தொடர்பில் செயற்திட்டத்தால் ஒப்பந்தகாரர்களுடைய கோரிக்கைகளை தீர்ப்பதிலுள்ள தாமதம் காரணமாக செலுத்தப்பட்ட ரூபா 12.34 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான தண்டப்பணங்கள் உரிய ஒப்பந்தங்களின் சிவில் வேலைகளின் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 4.3 செயற்திட்டத்தின் கட்டம் 2 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண வேலைகள்

---

### 4.3.1 வேலை நோக்கெல்லையில் செய்யப்பட்ட மாற்றங்கள்

---

வீதித் துறை உதவிச் செயற்திட்டத்திற்கான (ஆர்எஸ்ஏபி) இரண்டாவது மேலதிக நிதியளிப்புக்கான நிதியளிப்பு உடன்படிக்கையின் பட்டோலை 01 இன்படி, ரூபா 114,000,000 இற்கு சமமான எஸ்டிஆர் 63,600,000 (ஐ.அ.டொலர் 100,000,000) வடக்கு மாகாணத்திற்கு இணைப்பை வழங்குகின்ற கிழக்கு- மேற்கு இடைவெளி வீதிகளிற்கு முன்னுரிமையளித்து புனரமைப்பு செய்யும் குறிக்கோளுடன் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆகவே, இரண்டு வரிசையிலிருந்து நான்கு வரிசைகளில் வீதியை அகலமாக்குவதற்கு ஏ 06 அம்பேபுஸ்ஸ- தம்புள்ள வீதி (91 கிமீ) மற்றும் ஏ 06 கந்தளாய் திருகோணமலை வீதி (43 கிமீ) என்ற பெயருடைய இரண்டு வீதிகளை புனரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நோக்கெல்லையை மாற்றுவதற்கு ஏ 06 அம்புஸ்ஸ - தம்புள்ள வீதிக்குப் பதிலாக மலிபன் சந்தியிலிருந்து பாணந்துறை வரை (17 கிமீ) ஏ 02 கொழும்பு -காலி- ஹம்பாந்தோட்டை- வல்லவாயா பிரிவுகள் மற்றும் ஏ 03 பேலியகொடையிலிருந்து ஜாஎல வரையான (28 கிமீ) பேலியகொடை - புத்தளம் வீதியை புனரமைப்பதற்கு பின்னர் தீர்மானிக்கப்பட்டது. இந்நோக்கத்திற்காக 2012 ஏப்ரல் 28 இல் உலக வங்கி அங்கீகாரம் பெறப்பட்டது. மேலும், செயற்திட்ட முகாமைத்துவ அலகு அகலாமாக்கலுடன் மலிபன் சந்தியிலிருந்து பாணந்துறை நகரம் வரை 16.45 கிமீ மற்றும் பேலியகொடையிலிருந்து ஜா-எல

வரையான 17.50 கிமீ என்பவற்றை நான்கு வரிகைளிலிருந்து ஆறு வரிசைகளிற்கு வீதியை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆகவே, செயற்திட்டமானது கிழக்கு- மேற்கு இடைவெளியில் வீதிகளை முன்னுரிமையில் புனரமைப்பு செய்தலான ஆரம்ப நோக்கங்களிலிருந்து விலகியிருந்ததுடன் வடக்கு மாகாணத்திற்கான 91 கிமீ இணைப்பு வீதிகளிற்குப் பதிலாக 76.65 கிமீ தெற்கு வீதிகளை புனரமைபபதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 4.3.2 கந்தளாய்- திருகோணமலை வீதியின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள்

ஏ 06 கந்தளாய் - திருகோணமலை (157+000 கமீ முதல் 199+300 கிமீ வரையான பிரிவு( வீதியின் 42+300 கிமீ புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள் 2011 இல் தொடங்கப்பட்டு 2012 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. வீதியின் மொத்த நீளம் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுதேசிய போட்டிக் கேள்வி நடைமுறைகளின் கீழ் கேள்விகள் கோரப்பட்டு நான்கு ஒப்பந்தகாரர்களிற்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. வீதிப் பிரிவுகளின் புனரமைப்பு வேலைகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பிரிவு | உடன்பட்ட ஒப்பந்தப் பெறுமதி (வற் இல்லாமல்) | வீதியின் நீளம் | ஒரு கிமீ இற்கான கிரயம் | நிர்மாணிக்கப்பட வேண்டிய/ புனரமைக்கப்பட வேண்டிய பாலங்களின் எண்ணிக்கை | நிர்மாணிக்கப்பட வேண்டிய/ புனரமைக்கப்பட வேண்டிய மதகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | கிமீ | ரூபா | | |
| கந்தளாய்- ஹந்தலாவ (கேரீ/01) | 864,713,924 | 13.38 | 64,627,348 | 03 | 37 |
| ஹந்தலாவ- தம்பலகாமம் (கேரீ/02) | 834,106,005 | 10.72 | 77,808,396 | 03 | 43 |
| சம்பலகாமம்- சர்த்தபுர (கேரீ/03) | 719,078,523 | 12.00 | 59,923,210 | 08 | 43 |
| சர்த்தபுர- திருகோணமலை | 948,343,937 | 9.30 | 101,972,466 | 01 | 50 |

(கேரீ/04)

வீதிப் புனரமைப்பு வேலைகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேற்குறிப்பிட்ட அட்டவணையில் காணப்பட்டவாறு, வீதிப் பிரிவுகளின் ஒரு கிலோமீற்றருக்காக உடன்பட்ட கிரயம் குறிப்பிடத்தகளவு முரண்பட்டிருந்தது. துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயலாளரினால் தரப்பட்ட விளக்கங்களின்படி, கேரீ/04 இல் ஒரு கிலோமீற்றரின் கிரயம் அந்த வீதிப் பிரிவுகளின் தன்மை மற்றும் சிக்கல் காரணமாக ஏனைய வீதிப் பிரிவுகளை விட உயர்வாக இருந்தது. மேலும், 2011 இல் கேள்விகள் கோரப்பட்டிருந்த போதிலும் 2010 நெடுஞ்சாலைகள் பட்டியல் வீதங்களை (எச்எஸ்ஆர்) பயன்படுத்தி மதிப்பீடுகள் தயாரித்ததன் விளைவாக சகல வீதிப் பிரிவுகளிற்குமான பொறியியல் மதிப்பீடுகள் ஒப்பந்தகாரர்களின் உடன்பட்ட பெறுமதியை விஞ்சியிருந்தது. கணக்காய்வின் ஒருநோக்கில் நான்கு வீதிப் பிரிவுகளில், மூன்று பிரிவுகளின் ஒப்பந்த விலைகள் 20% இற்கு மேல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது.

(ஆ) ஒப்பந்த உடன்படிக்கைகளின்படி, புனரமைப்பு வேலைகள் 2012 ஒத்தோபர் இறுதிக்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டன. எவ்வாறாயினும், நான்கு ஒப்பந்தங்களும் வீதி அகழ்தல், பக்கங்களைத் துப்பரவாக்கல், கால்வாய் வேலைகள், பாலங்கள் மற்றும் மதகுகளின் நிர்மாணம் மற்றும் வீதித் தளபாடங்கள் வழங்கல், வீதி அடையாளமிடல் போன்ற அத்தகைய பல வேலைகளில் ஒப்பந்தகாரர்களால் காட்டப்பட்ட மெதுவான முன்னேற்றம் காரணமாக 02 தொடக்கம் 04 மாதங்கள் வரையான வீச்சிலான தாமதத்துடன் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. மேலும், கந்தளாய் முதல் ஹந்தலாவ (கேரீ/01) வீதிப் பிரிவிற்காக ரூபா 4.46 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான விலை வேறுபாடுகளிற்கான படிகள் ஒப்பந்தகாரர்களின் தவறுகள் காரணமாக ஏற்பட்ட தாமதங்களை கருத்திற்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 5.4.4 ஆம் பிரிவு மற்றும் ஒப்பந்த பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (ஐசீரீஏடி) நியமக் கேள்வி ஆவணத்தின் 14.2 ஆம் பந்தியின் பிரகாரம், எந்தவொரு ஒப்பந்த வேலைகளிற்கான முற்பணக் கொடுப்பனவுகளும் ஏதாவது தற்காலிகத் தொகைகள் மற்றும் நிகழத்தக்கவைகளைத் தவிர்த்து செலுத்தப்பட்டிருக்க

வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 504 மில்லியன் கூட்டுமொத்த தொகையான நான்கு ஒப்பந்தங்களிற்குமான முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 516.8 மில்லியன் கூட்டுமொத்த தொகையான தற்காலிக மற்றும் நிகழத்தக்கவைகளை உள்ளடக்கிய ரூபா 3,366 மில்லயன் மொத்த ஒப்பந்த தொகையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகவே ரூபா 76.9 மில்லயன் கூட்டுமொத்த தொகையான முற்பணங்கள் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனையின் viii ஆம் பிரிவின் 14.6 ஆம் பந்தியின்படி, இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களின் (ஐபிசீ) ஆகக் குறைந்த பெறுமதி உடன்பட்ட ஒப்பந்த பெறுமதியின் குறைந்தது 2 % ஆக இருக்க வேண்டும். எவ்வாறாயினும், ஏழு இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்கள் எழுந்திருந்ததுடன் தம்பலகாமம் முதல் சர்த்தாபுர வரை (கேரீ/3) மற்றும் சரத்தாபுர முதல் திருகோணமலை (கேரீ/04) வரையான வீதிப் பிரிவுகளின் புனரமைப்புக்காக ஒப்பந்தகாரர்களிற்கு உடன்பட்ட ஒப்பந்த பெறுமதியின் ஆகக் குறைந்த மட்டம் 2 % அடைவதற்கு முன்னர் ரூபா 77.87 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) கந்தளாய் முதல் ஹந்தலாவா வரையான வீதிப் பிரிவின் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்ட ஒப்பந்தகாரர்களிற்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் ஐசீரீஏடி ஆல் குறிப்பிடப்பட்ட நியமங்களுடன் இணங்கியிருக்கவில்லை என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

(i) ஐசீரீஏடி இன் நிர்மாணங்கள் மற்றும் வீதிகள் மற்றும் பாலங்களின் பராமரிப்புக்கான (எஸ்சீஏ/5) நியமக் அளவீடுகளின் 119.2 ஆம் பந்தியின்படி, கொடுப்பனவுகள் மூல காப்புறுதி, முறி உத்தரவாதம் அல்லது பிணை என்பன சமர்ப்பிப்பதில் ஒப்பந்தகாரர்களிற்கு மேற்கொள்ளப்பட வெண்டும். எவ்வாறாயினும், விலைப்பட்டடில் மற்றும் பற்றுச்சீட்டுக்களின் ரூபா 20.83 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான காப்புறுதிக மொத்தக் கொடுப்பனவு ஒப்பந்தகாரர்களிற்கு நேரடியாக செய்யப்பட்டதுடன் அத்தகைய கொடுப்பனவுகள் தொடர்பில் விலைப்பட்டடில் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ii) வேண்டப்பட்ட அளவுகளிற்கு மேல் கொள்வனவு செய்யப்பட்ட 1,104 சதுர மீற்றர் ஜியோ- துணிகள் 2012 மே மாதத்திலிருந்து 2013 சனவரி மாதம் வரை வேலைத்தளத்தில் இருந்ததுடன் அந்த மேலதிக பொருட்களிற்காக ரூபா 1.97 மில்லியன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) தம்பலகாமம் முதல் சர்த்தாபுர (கேரி/03) வரையான வீதிப் பிரிவின் இடைக்காலச் கொடுப்பனவுச் சான்றிதழ்களின்படி, செய்யப்பட்ட வேலைகளின் உள்ளபடியான அளவுகள் பீஓகியூ இல் உள்ளடக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட அளவுகளை குறிப்பிடத்தக்களவு விஞ்சியிருந்தது. ஆகவே, மதிப்பீட்டை விஞ்சி ரூபா 11.64 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தமையால், அது முறையான அளவீடுகளைச் செய்த பின்னர் பிஓகியூ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 4.4 வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ஆர்எம்ரீஎவ்) 2005 செப்தெம்பர் 09 இல் திறைசேரி செயலாளரால் கைசாத்திடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் கீழ் தாபிக்கப்பட்டிருந்தது. நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 06 ஆம் பிரிவின்படி, வீதிப் பராமரிப்புக்காக குறித்தொதுக்கிய பெற்றோல் மற்றும் டீசல் விற்பனையில் பெறப்பட்ட வருமானம் மற்றும் தேசிய பாதீட்டின் மூலம் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் கீழ் பெறப்பட்ட பெறுகைகள் என்பன நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் பொதுத் திறைசேரியிலிருந்து வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தின் மூலம் பாதீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை மீளப் பெறுகின்ற மற்றும் தேசிய வீதிப் பராமரிப்பு நோக்கங்களிற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அத்தகைய நிதிகளை விடுவிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 06 ஆம் பிரிவின்படி, வீதிப் பராமரிப்பு நோக்கங்களிற்காக குறித்தொதுக்கிய பெற்றோல் மற்றும் டீசல் விற்பனையில் பெறப்பட்ட வருமானத்திலிருந்து ஒதுக்கப்பட்ட தொகை உள்ளடங்கிய தேசிய வீதி பராமரிப்பதற்காக எம்ஓபிஎச் இற்கு

செய்யப்பட்ட தற்போதைய பாதீட்டு ஒதுக்கீடு நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பெற்றோல் மற்றும் டீசல் விற்பனையிலிருந்தான வரி வருமானத்தை சேகரிப்பதற்கான பொறிமுறையொன்றை வடிவமைப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேலும், 2012 இல் வீதிப் பராமரிப்பு நோக்கங்களிற்காக பொதுத் திறைசேரியால் செய்யப்பட்ட ரூபா 5,961 மில்லியன் தொகையான மொத்த ஒதுக்கீட்டில், நம்பிக்கை பொறுப்புக்கு ரூபா 1,332 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்தது. நம்பிக்கை பொறுப்பின் ஒத்திசைவில்லாமல் எம்ஓரிஎச் ஊடாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 4,629 மில்லியன் மிகுதித் தொகை பெறப்பட்டிருந்தது.

(iii) மேலும், வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 2012 இற்கான வருடாந்த செயல்திட்டம் அல்லது வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயலாற்றலை அளவீடுவதற்கு முடிந்தளவில் உரிய ஆண்டு இறுதியில் முன்னெற்ற அறிக்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு, வெளிநாட்டு ஆலோசனையாளர்களிடமிருந்தான ரூபா 68.3 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 631,750 மற்றும் உள்ளூர் நிதிகளிலிருந்து ரூபா 31.10 மில்லியனான கிரயத்தில் வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான ஆலோசனை பெறுவதற்காக 2008 மே 15 இல் ஆலோசனையாளர்களுடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கை காலம் 2011 மே மாதம் காலாவதியாகி இருந்ததுடன் வெளிநாட்டு ஆலோசனையாளர்களிற்காக ரூபா 34 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 291,411 மற்றும் உள்ளூர் ஆலோசனையாளர்களிற்கான ரூபா 14.35 மில்லியன் சொல்லப்பட்ட உடன்படிக்கையின் இறுதியில் செலுத்தப்பட்டிருந்தது. தொழில்நுட்ப கணக்காய்வு உதவியில் தொழில்நுட்ப கணக்காய்வு கைநூலின் இறுதி அறிக்கை மற்றும் ஆர்எஸ்ஏபி -01 செயற்திட்டத்தின் கட்டம் - 01 இற்கான இறுதி அறிக்கை போன்ற ஆலோசனையாளர்களால் மீளாய்வாண்டின் பொது சமர்ப்பிக்கப்பட வேண்டிய பல அறிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 8.05 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 63,175 மற்றும் ரூபா 3.11 மில்லியன் தொகை செலவழித்து தயாரிக்கப்பட்டு

ஆலோசனையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கைநூல் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேல், வெளிநாட்டு ஆலோசனையாளர்களுக்காக ரூபா 31 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 265,813 மற்றும் உள்ளூர் ஆலோசனையாளர்களிற்காக ரூபா 14.94 மில்லியன் பெறுமதியான புதிய உடன்படிக்கை மேற்குறிப்பிட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்க தவறியமையை கருத்திற்கொள்ளாமல் அதே ஆலோசனையாளர்களுடன் 2012 பெப்ரவரி 13 இல் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்தது. முதலாவது உடன்படிக்கையின் கீழ் வழங்வேண்டியிருந்த நிலுவை அறிக்கைகள் உள்ளடங்கலாக 13 வேறு அறிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு ஆலோசனையாளர்களுக்காக ரூபா 14 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 119,615 மற்றும் உள்ளூர் ஆலோசனையாளர்களிற்காக ரூபா 6.95 மில்லியன் புதிய உடன்படிக்கையின் கீழ் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றின் மீது சமர்ப்பிக்கப்பட வேண்டிய முன்னேற்ற அறிக்கைகள் பட்டியலை விட பின்னோக்கி இருந்தது.

## 4.5 மனித வள முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டவாறு, செயற்திட்ட முகாமைத்துவ அலகின் உத்தியோகத்தர்கள் 12 பிரதான உத்தியோகத்தர்கள் மற்றும் 20 துணைநிலை உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ளதுடன் திருகோணமலையில் அமைந்துள்ள செயற்திட்ட ஆலோசனைப் பிரிவு (பிசீயூ) 17 பிரதான உத்தியோகத்தர்கள் மற்றும் 25 துணைநிலை உத்தியோகத்தர்களை கொண்டுள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நான்கு பொறியியலாளர் பதவிகள் வெற்றிடங்களாக இருந்த அதேநேரம் இரண்டு எழுதுனர்கள் மற்றும் ஒரு சாரதி செயற்திட்ட முகாமைத்துவ அலகின் அங்கீகரித்த பதவியணியை விஞ்சி சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும், செயற்திட்ட முகாமைத்துவ அலகு ஒரு ஒப்பந்த நிபுணர், ஒரு அளவீட்டு நில அளவையாளர் மற்றும் 12 வேறு துணைநிலை உத்தியோகத்தர்களின் குறைவுகளுடன் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் செயற்திட்ட ஆலோசனைப் பிரிவு உத்தியோகத்தர்கள் உள்ளக விண்ணப்பங்களை கோரும் அடிப்படையில் தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின்

உத்தியோகத்தர்களையும் கொண்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந்திகதிய எம்எஸ்டி 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2.7 ஆம் பந்தியின்படி, வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ அலகின் உத்தியோகத்தர்கள் ஆகக் கூடியது மூன்று ஆண்டு காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையின் கீழ் பொது அறிவித்தல் ஊடாக சேர்பதற்கு வேண்டப்பட்டிருந்தது.

(இ) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 4.1.1 ஆம் பந்தியின்படி, சம்பளமற்ற விடுமுறையுடன் அரசாங்க முகவராண்மைகளிலிருந்து முழுநேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையின் கீழ் செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட உத்தியோகததர்கள் நிரந்தர பதவிக்கான சம்பளத்தின் 50 % மேலதிக படிக்கு தகுதியுள்ளனர். எவ்வாறாயினும், செயற்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் செயற்திட்ட ஆலோசனைப் பிரிவுக்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 34 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4.83 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) வழமையாக, செயற்திட்ட முகாமைத்துவ அலகில் சேவையாற்றும் காலத்திற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்களின் தற்காலிக பணிக்கொடை ஏற்பாட்டுத் தொகை செயற்திட்டத்தால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பப்படுகின்றது. பணிக்கொடைக் கணிப்பீடு செயற்திட்ட முகாமைத்துவ அலகில் சேவையாற்றிய காலத்திற்குப் பதிலாக உத்தியோகத்தர்களின் முழுச் சேவைக் காலத்தினையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது என அவதானிக்கப்பட்து. ஆகவே, 2012 திசெம்பர் 31 வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 22 உத்தியோகத்தர்களிற்காக ரூபா 5.10 மில்லியன் மேலதிகமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 4.6 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கந்தளாய் - திருகோணமலை வீதியில் செய்யப்பட்ட முன்னேற்றம் காரணமாக திருகோணமலையில் சேதமடைந்திருந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றுலா விடுதிக்கு புதிய கட்டிடம் நிர்மாணிப்பதற்காக செய்யப்பட்ட ரூபா 2.5 மில்லியன் தொகையான ஏற்பாடுகளில், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 2.4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. உரிய

நிர்மாண வேலைகள் நேர் கூலிகள் அடிப்படையின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேலதிகச் செலவினமான ருபா 360,000 தோகையான மேந்தலைகள் மற்றும் சாதாரண சந்தர்ப்பங்களில் வெளி ஒப்பந்தகாரர்களிடமிருந்து கிரயங்கள் சாட்டுதல் செய்யப்பட வேண்டிய ரூபா 75,000 தொகையான இலாபம் என்பன இது தொடர்பாக செய்யப்பட்ட கொடுப்பனவுகளில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட உள்ளூர் உதவுதொகைகளிற்கு எதிராக சாட்டுதல் செய்யப்பட்டது.

(ஆ) செயற்திட்டமானது ரூபா 3.2 மில்லியன் மொத்தக் கிரயத்தில் கந்தளாய்-திருகோணமலை வரையான வீதிப் பிரிவின் புனரமைப்பில் பயன்படுத்துவோர் திருப்தி அளவை மேற்கொள்வதற்காக 2012 ஆகஸ்ட் மாதத்தில் தனியார் தரப்பினருடன் ஒப்பந்த உடன்படிக்கையை கைசாத்திட்டிருந்ததுடன் வெளிநாட்டு கடன் பெறுகைகளிற்கு எதிராக சாட்டுதல் செய்யப்பட வேண்டுமென எதிர்பாரக்கப்பட்டது. உடன்படிக்கையின் நிபந்தனைக் குறிப்பின்படி, சகல நடவடிக்கைகளின் அளவைகளும் 2012 திசெம்பர் 18 அன்று அல்லது அதற்கு முன்னர் முடிவு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், பூர்த்தியாக்கப்பட்ட மின்னியல் தரவுநிரற்படுத்தல் மற்றும் பேஸ்லைன் அளவீட்டு அறிக்கை சமர்ப்பித்தல் போன்ற அத்தகைய அளவை நடவடிக்கைகள் 2013 ஏப்ரல் 30 வரையிற்கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்ட பணிப்பாளர் அலுவலகம் 2011 பெப்ரவரி 01 இலிருந்து செத்சிறிபாயா கட்டிடத்தின் மூன்றாவது மாடியில் அமைந்துள்ளதுடன் வளவின் 5100 சதுர அடியை பயன்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு (யூடிஏ) ரூபா 6.6 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 ஏப்ரல் 04 வரையும் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் சட்டரீதியான உடக்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.7 விதிவிலக்கான செலவினங்கள்

சேயற்திட்ட நிதி அறிக்கையின்படி, வீதி அபிவிருத்தி நோக்கங்களிற்காக சுற்றாடல் மற்றும் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ அலகு உத்தியோகத்தர்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் பயிற்சிகள் தேவைப்பட்ட தரப்பினராக பயிற்சி மற்றும் நிறுவன ரீதியான வலுப்படுத்தல் கூறுகீழ் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி

நோக்கங்களிற்கான சுற்றாடல் மற்றும் சமூக நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத 2012 பெப்ரவரியில் இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச கொள்வனவு நடைமுறை நிகழ்ச்சித்திட்டத்திற்கு எம்ஓபிஎச் இன் மேலதிக பணிப்பாளர் நாயகம் பங்குபற்றுவதற்காக மேற்குறிப்பிட்ட கூறின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளில் ரூபா 834,949 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

மேலும், சனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட 2010 யூலை 09 ஆந் திகதிய சீஏ/1/16/1 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு, செற்திட்டத்தின் நான்கு உத்தியோகத்தர்களால், 2012 யூன் மாதத்தில் தாய்லாந்திற்கு செய்யப்பட்ட வெளிநாட்டு சுற்றுலா மீதான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.8 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

அம்பேபுஸ்ஸ முதல் தம்புள்ள வரையான வீதிப் பிரிவின் புனரமைப்புகளின் பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1.79 மில்லியன் பெறுமதியான ஆய்வு கூட உபகரணங்கள் 2011 பெப்ரவரி 15 முதல் 2012 யூன் 15 வரை குருநாகலை வளவில் வைக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கெல்லையிலிருந்து உரிய வீதிப் பிரிவின் புனரமைப்பு வேலைகள் மீளப் பெறப்பட்டமை காரணமாக ஜா-எல வளவிற்கு மாற்றப்பட்டிருந்தது. அன்றிலிருந்து ஜா-எல வளவில் பொருளிருப்பு விடயங்கள் பயன்பாடற்று இருந்தன. 2012 ஏப்ரல் மாதத்தில் கணக்காய்வு குழுவால் செய்யப்பட்ட திடீர் வருகையின் போது, மார்சல் பரீட்சிப்பு உபகரணம்- அமுக்கி, கலிபோனிய தாபறிப்பு பரீட்சிப்பு உபகரணம், லொஸ் ஏன்சல் ஆபரசன் இயந்திரம் மற்றும் ரிச்லோரித்திலோன் 200 லீ பரல் போன்ற அத்தகைய பல விடயங்கள் போதிய சூழல் மற்றும் ஏனைய பாதிப்புகளிலிருந்து போதி பாதுகாப்பு இல்லாமல் வளவுக்கு வெளியே வைக்கப்பட்டிருந்தமை வெளிப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) மீள் நிரப்பல்களிற்கான கூற்றுக்களை தயாரித்தல்
(ஆ) செயற்திட்ட ஆலோசனை அலகின் முகாமைத்துவம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) பொருளிருப்புக் கட்டுப்பாடு
(ஊ) கணக்கீடு